நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

# CC No. 25 /2020

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி **அ..சா.32**-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமா மகேஸ்வரி | வயது | 37 |
| கணவர் பெயர் | செந்தாமரைக்கண்ணன் | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடிதனம் | மதம் | |
| ஊர் | மன்னார்குடி | தாலுக்கா | மன்னார்குடி |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் மன்னார்குடியில் ருக்மணிபாளையம் நடுத்தெருவில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடிதனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி சக்திவேலை தெரியும். 2ம் எதிரியை தெரியாது. நான் 10-ம் வகுப்பு வரைபடித்துள்ளேன். கோர்ட்டில் ஓ.ஏ. வேலை வாங்கி தருவதாக 1ம் எதிரி சொன்னார். எனது வீட்டுக்காரரின் நண்பர் ரமேஷ்டம் 1வது எதிரி கூறினார். ரமேஷ் மன்னார்குடியில் ஸ்டுடியோ வைத்துள்ளார். ரூ.2 லட்சம் ரூபாய் பணம் கொடுத்தால் வேலை வாங்கி தருவதாகவும், ரூ.1 லட்சம் ரூபாய் அட்வான்ஸாக கொடுக்கும்படி சொன்னார். 2018ம் வருடம் பிப்ரவரி மாதம் 1ம் எதிரியிடம் ரூ.1 லட்சம் ரூபாய் ரொக்கமாக அவரது வீட்டில் வைத்து ரமேஷ்டுடன் இருந்து கொடுத்தேன். வேலை கிடைக்கவில்லை. ஏப்ரல், மே கோர்ட் லீவு, ஜீன், ஜுலையில் கண்டிப்பாக வேலை வாங்கி கொடுப்பதாக 1வது எதிரி சொன்னார். பலமுறை கேட்டேன். அதற்கு பதில் சொல்லவில்லை. பிறகு திருவாரூர் டி.சி.பி. போலிசில் புகார் கொடுத்தேன். அப்போதுதான் தெரிந்தது. எங்களை போல் 83 நபர்களை ஏமாற்றியுள்ளார் என்று தெரியவந்தது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

டி.சி.பி. போலிசில் எப்போது புகார் கொடுத்தார் என்றால் ஜூலை மாதத்தில்

கொடுத்தேன். டி.சி.பி. போலிசில் புகார் கொடுத்ததற்கான புகாரின் நகலை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ரமேஷ்டம் கொடுத்துள்ளேன். ரமேஷ்சை விசாரித்தால் நான் கொடுத்த புகாரின் நகலை கொடுப்பார் என்றால் ஆமாம். டி.சி.பி. போலிசில் புகார் கொடுக்கும்போது எழுதி கொடுத்தீர்களா அல்லது டைப் செய்து கொடுத்தீர்களா என்றால் டைப் செய்து கொடுத்தேன். எத்தனை பக்கத்தில் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் நான்கு, ஐந்து வருடம் ஆகிறது ஞாபகம் இல்லை. ரமேஷ் என்பவர் வேலை வாங்கி கொடுக்கும் ஏஜெண்டா என்றால் இல்லை. ரூ.1லட்சம் பணத்தை 1ம் எதிரியிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் நானும், எனது கணவர், ரமேஷிம் சேர்ந்துதான் கொடுத்தோம். எத்தனை மணிக்கு போனோம் என்றால் மதிய சாப்பாடு முடித்து சுமராக 2.00 மணிக்கு சென்றோம். எந்த தேதிக்கு போனோம் என்றால் தேதி ஞாபகம் இல்லை. நாங்கள் போகும்போது யார், யார் இருந்தார்கள் என்றால் 1ம் எதிரி இருந்தார். சக்திவேல் அரசாங்க வேலையில் இல்லை என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும், வேண்டியவர் மூலமாக வேலை வாங்கி தருவதாக சொன்னார். 1ம் எதிரிக்கு தெரிந்தவர் யார் என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் ரமேஷ் மூலமாகத்தான் கொடுத்தேன். 1ம் எதிரி பணத்தை திருப்பி கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளதாக சொன்னேன் என்றால் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை. நான் காவல் துறை விசாரணையில் பணத்தை திரும்ப வாங்கி கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் பணத்தை திரும்ப வாங்கவில்லை. நான் சொல்லும் ரமேஷ் என்பவரிடம்தான் ரூ1லட்சம் பணம் உள்ளது என்றால் சரியல்ல. நான் 1ம் எதிரியை பார்க்கவில்லை, அவரிடம் பணம் கொடுக்கவில்லை, நான் பணம் கொடுத்ததாக சொல்வது ரமேஷிடம்தான் கொடுத்தேன், அந்த பணம் ரமேஷிடம்தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் காவல்துறையில் புகார் கொடுக்கும்போது பணத்தை திரும்ப பெற்றுக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் பணத்தை திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை. நான் மாறி, மாறி சாட்சியமளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் 1ம் எதிரி சக்திவேலை பார்க்காமல் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்லப்பட்டது. )**

**மறுவிசாரணை - இல்லை.**